# ஸாத்வீகக் கோலங்கள்

(Satwik Rangoli - Tamil)

**॥ ஶ்ரீ ஸரஸ்வதி தேவ்யை நம: ॥**

வித்யாக்களை அருளும் ஶ்ரீ ஸரஸ்வதி தேவி, பல்வேறு தெய்வங்களின் தத்துவங்களை ஆகர்ஷிக்கும் கோலங்களை வரையும் ஞானத்தை நமக்கு ஈந்து இந்நூலை வெளிக்கொணர வேண்டும் என அவளின் மங்கள சரணங்களில் பிரார்த்தனை செய்யப்படுகிறது!

## முன்னுரை

### 1. நோக்கம்

கோலங்களைப் பற்றி பல நூல்கள் வெளிவந்திருந்தாலும், இந்த கையேடை வெளியிடுவதன் நோக்கம், கோலங்களில் ஸாத்வீகக் கோலங்களும் உள்ளன என்பது எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுவே.

## 2. மஹத்துவம்

ஹிந்து தர்மத்தில் அனைத்து பண்டிகைகளும் விதிகளும் அந்தந்த தெய்வங்களுடன் சம்பந்தப்பட்டவை. பல்வேறு பண்டிகை களின்போதும் தெய்வ வழிபாட்டின்போதும் அந்தந்த தெய்வ தத்துவம் சுற்றுப்புற சூழலில் அதிகமாக உள்ளது; மற்றும் வழிபாட்டின் மூலமாக அது ஆகர்ஷிக்கப்படுகிறது. இவ்வாறு சூழலில் அதிகமாக உள்ள தெய்வீக சைதன்யத்தை க்ரஹித்து அனைவரும் பயனடைய வேண்டும். அதனால், குறிப்பிட்ட தெய்வ தத்துவங்களை க்ரஹித்து வெளியிடக் கூடிய கோலங்கள், இந்த எளிய கையேட்டில் இடம் பெற்றுள்ளன. இந்த கோலங்களின் மூலம், தெய்வ தத்துவங்கள் ஆகர்ஷிக்கப் பட்டு வெளியிடப்படுவதால் சுற்றுப்புற சூழல் தெய்வீகத் தத்துவத்தால் நிறைந்து

அனைவருக்கும் நன்மை ஏற்படுகிறது.

## 3. சிறப்புகள்

அ. சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய ஐந்தும் அவற்றின் சக்திகளும் இணைந்தே உள்ளன. அந்த அடிப்படையில் கோலத்தின் வடிவங்களையும் நிறங்களையும் சிறிது மாற்றும்போது அதன் அதிர்வலைகளும் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை, ஸ்ரீ கணபதி, ஸ்ரீராம், தத்த மற்றும் ஸ்ரீ துர்காதேவி தத்துவங்கள் நிறைந்த கோலங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஆ.ஒவ்வொரு தெய்வத்திடமிருந்தும் சக்தி, ஆன்மீக உணர்வு, சைதன்யம், ஆனந்தம் மற்றும் சாந்தி ஆகிய ஐந்து அனுபூதிகளும் கிடைக்கின்றன. இந்த கையேட்டில், எந்த கோலத்தின் மூலம் எவ்வகையான அனுபூதி

கிடைக்கிறது என்பது கூறப்பட்டுள்ளது.

இ. கோலங்களில் அதிகபட்சம் 10% தெய்வீக தத்துவத்தையே கொண்டு வர முடியும். இந்த கையேட்டிலுள்ள கோலங்கள், அதிகபட்ச தெய்வ தத்துவத்தை ஆகர்ஷிப்பதற்காக ஸனாதனின் ஸாதகர்கள் அவற்றை பக்திபூர்வமாக வரைய முயற்சி செய்துள்ளனர். ஸாதகர்களின் ஆன்மீக உணர்வு மற்றும் ஆன்மீக நிலை அதிகரிப்பதற்கு ஏற்ப 10% நிலையை அதிக அளவு நெருங்க முடியும்.

## 4. கோலங்களைத் தேர்ந்தெடுத்தல்

**4அ. பண்டிகைகள், விரதங்கள் மற்றும் உற்சவங்களுக்கு ஏற்ற கோலங்கள் :** இந்த கையேட்டில் பண்டிகைகள், விரதங்கள் மற்றும் உற்சவங்கள் எந்தெந்த திதியில்

வருகின்றன என்ற அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தெய்வத்தின் தத்துவத்தை ஆகர்ஷிக்கும் கோலத்தின் பக்க எண்ணும் கொடுக்கப் பட்டுள்ளது.

## 5. வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற கோலங்கள்

பிறந்த நாள் மற்றும் ஆரத்தி சமயத்தில் வாயிற்படிக்கு அருகிலும், உணவுத் தட்டை சுற்றியும் ஆனந்த அதிர்வலைகளை வெளிப்படுத்தும் கோலங்கள் எவை என்பதும் இக்கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 6. சில செயல்முறைக் குறிப்புகள்

இக்கையேட்டின் அட்டையிலும் **பின்பக்கத் திலும்** கொடுக்கப்பட்ட கோலங்களிலுள்ள

வண்ணனங்களையே உபயோகிப்பது சிறந்தது. அவை ஸாத்வீகமானவை. அவற்றால் கோலங்களின் ஸாத்வீகத்தன்மையும் அதிகரிக்கிறது. கோலத்தின் ஸாத்வீகத்தன்மை அதிகரித்தால் தெய்வ தத்துவம் ஆகர்ஷிக்கப் பட்டு உபாசகருக்கு நன்மை ஏற்படுகிறது. அதோடு வாயுமண்டலமும் தூய்மையாகிறது.

## 7. பிரார்த்தனை

இக்கையேட்டின் மூலம் கோலங்கள் மட்டுமல்லாமல் அனைத்து செயல்களுமே ஸாத்வீகமாக மாற வேண்டும்; இதற்குரிய முயற்சிகளை அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதே ஸ்ரீ குரு சரணங்களில் செய்யப்படும் பிரார்த்தனை!– தொகுத்தவர்